செய்தி வெளியீடு எண்.737 நாள்: 20.10.2009

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவுத்துறை அலுவலர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்

தமிழ்நாட்டை மின்னணு ஆளுமையில் முன்னோடி மாநிலமாக திகழச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதிவுத்துறையை கணினிமயமாக்கும் திட்டமான “ஸ்டார்” திட்டத்தை 6.2.2000–த்தில் தொடங்கி வைத்தார். அதன் அடிப்படையில், தமிழகத்தில் 559 சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

மின்னணு ஆளுமையில் பதிவுத்துறையினை முதன்மையாக திகழச்செய்திடவும், பொதுமக்களுக்கு துறையின் சேவைகள் விரைவாக சென்றடைத்திடவும், ரூபாய் 5 கோடி மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதியாக பெறப்பட்டுள்ளது. அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் அகண்ட அலைவரிசை இணைப்பும், அலுவலர்கள் விரைவாக பணியாற்றிட ஏதுவாக மடிக்கணினிகளும், துறையின் விரைவான சேவைக்காக புதிய மென்பொருள் தயாரிக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இதன் அடிப்படையில், முதல் கட்டமாக ரூபாய் 35 இலட்சம் செலவில் 88 மடிக் கணினிகள் எல்காட் நிறுவனத்தின் மூலம் வாங்கப்பட்டு கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள், துணை பதிவுத்துறை தலைவர்கள், உதவி பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (20.10.2009) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.என். சுரேஷ் ராஜன், வணிக வரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், பதிவுத்துறைத் தலைவர் திரு. இரா. சிவகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.